# BON SECOURS GENERALATE

ADAIKALA ANNAI NAGAR, RAJIV GANDHI HIGH ROAD,
ARANVOYAL KUPPAM, THIRUVALLUR DISTRICT - 602 025.


**கடுதாசி: 01/2022** Date: 03.08.2022

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' – லாவோட்சே**

**என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!**

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்!**

நம் அடைக்கல அன்னை விழாவுக்கான சுற்றுமடல் உங்களை வந்தடைந்திருக்கும் என நம்புகிறேன். இத்துடன் **07.08.2022** அன்று நடக்கும் நமது **Online Meeting** -கான நேர அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. காலை 8 மணி தொடங்கி மாலை 5.55 வரை செல்லும் இந்த சந்திப்பில் சபைச் சகோதரிகள் அனைவரையும் சந்திப்போம். இப்பெரு நிகழ்வில் ஒருவர் கூட விடுபடாமல் கலந்து கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அனைத்து இல்லங்களும் பங்குகொள்வதால் குறைவான நேரம் கொடுக்கப்படுகிறது. எனவே உங்களுக்குக் குறிக்கப்பட்ட நேரத்தில் தவறாமல் கலந்து கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் உள் நுழையும் போது உங்கள் **குழுமத்தின் பெயரில்** அனைவரும் இணைந்து உள் நுழையுங்கள். தனித்தனியான கைபேசி, Device போன்றவற்றில் உள் நுழைவதைத் தவிர்க்கவும். உங்களுக்கான நேரத்தில் ஏதாவது Line problem இருந்தால் செயலர் சகோதரி ரீட்டாவின் கைபேசி எண்ணுக்கு (9487291947) Message செய்யுங்கள். அடுத்த இல்லத்திற்குச் சென்றுவிட்டு பின்னர் உங்களுக்கு வாய்ப்பளிப்போம். இத்துடன் அடைக்கல மாதா நவநாள் தயாரிப்புக் கையேடும் அனுப்பப்படுகிறது. அனைவரும் தவறாது பயன்படுத்தி அடைக்கலத்தாயின் ஆசீர் பெற அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:

வழக்கம் போல் அடைக்கல அன்னை விழா நாளான 13 -ஆம் தேதி தலைமையகத்தில் **சமபந்தி உணவு** ஏற்பாடு செய்யப்படுகிறது.

**பிரபஞ்சப் பேரன்பில்,**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**


Phone : 044 - 27620065 email : fbsgeneralate@gmail.com